TNPSC Tamil Current Affairs 13th April 2017

1). அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற Malala Yousafzai அவர்களுக்கு எந்த நாட்டின் கௌரவ குடியுரிமை வழங்கப்பட்டது?

A).Norway.

B).Canada.

C).Switzerland.

D).South Africa.

விடை : B). Canada.

அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற Malala Yousafzai அவர்களுக்கு கனடா(Canada) நாட்டின் கௌரவ குடியுரிமையை, பெண்கள் கல்விக்காக வாதடுதல் போன்ற செயல்களுக்காக வழங்கப்பட்டது. கனடா(Canada) நாட்டின் கௌரவ குடியுரிமையைப் பெறும் 6 ஆவது நபர் மற்றும் 19 வயதான இளம் பெண் இவரே. Malala Yousafzai அவர்களை கனடா நாட்டின் குடியரசுத் தலைவர் அவர்கள் கனடா நாட்டின் ஜனநாயக இருக்கைக்கு வரவேற்றார். கனடா நாட்டு நாடாளுமன்றத்தில், கௌரவ குடியுரிமையைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் நாடாளுமன்ற கூட்டுத் தொடரிலும் முதன் முறையாக உரையாற்றும் 19 வயதான இளம் பெண் இவரே. இதுவரை கனடா(Canada) நாட்டின் கௌரவ குடியுரிமையைப் பெற்றவர்கள்.

| வரிசை எண் | பெயர் மற்றும் பெற்ற ஆண்டு |
|---|---|
| 1 | Raoul Wallenberg(1985) |
| 2 | Nelson Mandela(2001) |
| 3 | Tensin Gyasto(2006) |
| 4 | Aung San Suu Kyi(2007) |
| 5 | Karim Aga Khan IV(2010) |

2). United Nations Development Programme(UNDP) ன் புதிய அதிகாரியாக நியமிக்கப்பட்டவர் யார்?

A).Kemal Dervis.

B).Helen Clark.

C).Segolene Royal.

D).Achim Steiner.

விடை : D). Achim Steiner.

ஜெர்மனியைச் சேர்ந்த Achim Steiner , அரசியல் மற்றும் சுற்றுச்சூழல் நிபுணர். இவர் United Nations Development Programme(UNDP) ன் புதிய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னால் நியூசிலாந்து பிரதமர் Helen Elizabeth Clark ஐத் தொடர்ந்து இப்பதவியில் அமர்த்தப்படுவார். Achim Steiner, முன்னதாக United Nations Environment Programme(UNEP) இல் பணியாற்றினார் மற்றும் கென்யாவில் உள்ள ஐ.நா அலுவலகத்தில் பணியாற்றினார். HIV/AIDS, ஜனநாயக ஆட்சி, ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல், சமூக முன்னேற்றம் போன்ற செயல்களை United Nations Development Programme(UNDP) கண்காணிக்கும். யுனைடெட் ஸ்டேட்ஸ் ல் உள்ள நியூ யார்க் கில் United Nations Development Programme(UNDP) யின் தலைமையகம் அமைந்துள்ளது.

3). சர்வதேச மனித விண்வெளி விமான தினம் எந்த நாளன்று அனுசரிக்கப்படுகிறது?

A). ஏப்ரல் 12.

B).ஏப்ரல் 10.

C).ஏப்ரல் 1.3

D).ஏப்ரல் 14.

விடை : A). ஏப்ரல் 12.

மனித இணத்திற்க்கான விண்வெளி சகாப்தத்தின் தொடக்கத்தினையும், மன உறுதியுடன் விண்வெளி அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்திற்கு

பங்களித்து நிலையான முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு நாடு மற்றும் மக்களின் நிலையை மேம்படுத்தியதனையும் விண்வெளியை அமைதியான செயல்களுக்காக முறையே பயண்படுத்தியது போன்ற செயல்களின் தொடக்கத்தினைக் கொண்டாடுவதர்க்காக ஏப்ரல் 12 சர்வதேச மனித விண்வெளி விமான தினமாக அனுசரிக்கப்படுகிறது. ஏப்ரல் 12, 1961 யூரி ககரின் விண்வெளிப் பயணத்தின் தொடக்கமாக விண்வெளி சென்றார்.

4). எந்த மாநில அரசாங்கம் "அம்மாக்கு வந்தனம்" எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது?

A).கர்நாடகா.

B).ஆந்திர பிரதேசம்.

C).கேரளம்.

D).தமிழ் நாடு.

விடை : B). ஆந்திர பிரதேசம்.

"அம்மாக்கு வந்தனம்" எனும் திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகளில் ஆந்திர பிரதேச அரசாங்கம் அம்மாக்களுக்காக அறிமுகப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பள்ளி ஆண்டு விழாவின் பொழுது அல்லது கல்வி நிர்வாகம் தேர்ந்தெடுத்த வேறொறு நாளில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் அம்மாக்களுக்கு பாத பூஜையும் நடத்தப்படும். இத்திட்டத்தின் மொத்த செலவு 2.50 கோடி ருபாய். இதில் பாதியான 1.25 கோடி ருபாயை அரசாங்கம் ஒதுக்கும் மீதமுள்ள 1.25 கோடி ருபாயை பள்ளிகளில் பயின்ற முன்னால் மாணவர்கள் மற்றும் நன்கொடையாளர்களிடம் இருந்து பள்ளி நிர்வாகம் பெற்றுக்கொள்ளும்.

5). தேசிய தாய்மை தினம் எந்த நாளன்று அனுசரிக்கப்படுகிறது?

A). ஏப்ரல் 11.

B).ஏப்ரல் 10.

C).ஏப்ரல் 1.3

D).ஏப்ரல் 14.

விடை : A). ஏப்ரல் 11.

தாய்மை நலனைப் பற்றிய விழிப்புணர்வை கர்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களிடையே ஏற்படுத்த ஏப்ரல் 11 தேசிய தாய்மை தினமாக அனுசரிக்கப்படுகிறது. தேசிய தாய்மை தினம், வெள்ளை நாடா கூட்டணி(White Ribbon Alliance) யின் பாதுகாப்பான தாய்மைக்கு தொடக்கமாக அமைகிறது. கர்பகாலம் மற்றும் குழந்தை பிறப்பு போன்ற காலங்களில் பெண்களுக்கு போதுமான நலன்களை உறுதி செய்வதே 2017 ஆம் ஆண்டிற்கான தேசிய தாய்மை தினத்தின் நோக்கம்.

6). மெய்னிகர் நாணயத்தின் (Virtual Currencies) கட்டமைப்பை ஆய்வு செய்வதர்க்காக மத்திய அரசினால் உறுவாக்கப்பட்ட கமிட்டி எது?

A).Dinesh Sharma Committee.

B).Shaktikanta Das Committee.

C).H R Khan Committee.

D).B S Dharamraj Committee.

விடை : A). Dinesh Sharma Committee.

மெய்னிகர் நாணயத்தின் (Virtual Currencies) கட்டமைப்பை ஆய்வு செய்வதர்க்காக மத்திய அரசினால் Dinesh Sharma Committee உறுவாக்கப்பட்டது. இக்கமிட்டி இந்திய மற்றும் உலக நாடுகளின் கையிருப்பில் உள்ள மெய்னிகர் நாணயத்தினைக் கணக்கெடுக்கும். மெய்னிகர் நாணயத்தினை ஒழுங்கு படுத்துவதர்க்கான உலகலாவிய அமைப்பையும் சட்டதிற்க்குட்பட்ட மெய்னிகர் நாணயத்தின் கட்டமைப்புகளையும் இக்கமிட்டி ஆய்வு செய்யும். நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் பண மோசடி போன்றவற்றைக் கையாழும் முறைகளை Dinesh Sharma Committee பரிந்துறை செய்யும். இக்கமிட்டியினை Dinesh Sharma தலைமை தாங்கி 3 மாதத்திற்குள் இது தொடர்பான அறிக்கையினை வெளியிடுவார்.

7). இந்தியா தனது அண்டை நாடான எந்த நாட்டிற்கிடையே ஹிந்தி மொழி பாடத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கையெழுத்திட்டுள்ளது?

A).நேபால்.

B).சீனா.

C).மியான்மர்.

D). பங்களாதேஷ்.

விடை : B). சீனா.

இந்தியா தனது அண்டை நாடான சீனாவிற்கிடையே ஹிந்தி மொழி பாடத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கையெழுத்திட்டுள்ளது. சீனா பல்கலைக்கழகத்தில் 2012 ஆம் ஆண்டிலிருந்தே ஹிந்தி மொழி பாடத்திட்டம் நடைமுறையில் உள்ளது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் Shanghai தூதரகத்தின் அந்நிய நாட்டுப் பிரதிநிதி Prakash Gupta வினால் Indian Council for Cultural Relations(ICCR) அமைப்பின் சார்பில், Shanghai International Studies University(SISU) ன் தலைவர் Cao Deming அவர்களுடன் Shanghai யில் கையெழுத்தானத்து. முதன்முறையாக 5 ஆண்டுகளுக்கான இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் அக்டோபர் 29,2012 அன்று இந்தியாவின் வெளியுறவுச் செயலாளர் எஸ். ஜெயசங்கர் மற்றும் சீனாவிற்கான இந்தியத் தூதர் அவர்களினால் Shanghai International Studies University(SISU) யின் துணைத் தலைவர் Feng Qinghua அவர்களுடன் கையெழுத்தானத்து.

8). எந்த மாநில அரசாங்கம் "Adarana" எனும் பாரம்பரிய தொழில்களை முன்னேற்றுவதர்க்கான திட்டத்தை மறுபடியும் தொடங்கியுள்ளது?

A).Himachal Pradesh.

B).Sikkim.

C).Andhra Pradesh.

D).Odisha.

விடை : C). Andhra Pradesh.

ஆந்திர பிரதேச மாநில அரசாங்கம் "Adarana" எனும் பாரம்பரிய தொழில்களை முன்னேற்றுவதர்க்கான திட்டத்தை மறுபடியும் தொடங்கியுள்ளது. இது பின்படுத்தப்பட்டோர்களின் முன்னேற்றத்திற்காக தொடங்கப்பட்டுள்ளது. இத்தின் மூலம் பாரம்பரிய தொழில் புரியும் விவசாயிகளுக்கும் கைவினை தொழில் செய்வோருக்கும் கிராமப் புரங்களில் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவடதற்கும் நவீன இயந்திரங்கள், தொழில்நுட்பம், நிதியுதவி போன்றவை அளிக்கப்படும். "Adarana" திட்டம் முதன்முதலில் தெலுங்கு தேசக் கட்சியினால் தொடங்கப்பட்டது.

---